## 9. முன்மொழியப்பட்ட செயல்முறை அட்டவணை

| மாதம் | செயல்முறை | நேரம் |
|---|---|---|
| ஆண்டு முழுவதும் | குடியரசுச் சுவர் – சுவர் இதழ் | வடிவமைப்பின் மீது<br>60 நிமிடங்கள் வகுப்பில் விவாதம் |
| ஏப்ரல் | நிர்வசித்ரா–திரைப்படம் | 45 நிமிடங்கள் |
| ஆகஸ்டு – செப்டம்பர் | வாக்களிப்பது பற்றிய அட்டை விளையாட்டு | 45 நிமிடங்கள் |
| நவம்பர் | கிராம சபையைச் சென்று பார்வையிடல் | கிராம சபையைச் சென்று பார்வையிடுவதற்கு அரை நாள். அதன் தொடர் செயல்பாடுகளுக்கு 45 நிமிடங்கள் (அதே நாள் அல்லது மறுநாள்) |
| டிசம்பர் | பள்ளி நாடகம் | ஆயத்தம்<br>வகுப்பில் விவாதம் 30 நிமிடங்கள் மற்றும் செயல்பாடுகள்(பள்ளி ஆண்டு விழாவில் அல்லது தேசிய வாக்காளர் தினத்தில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக) |
| மொத்தம் | | தோராயமாக 3 மணி நேரம்<br>(கூடுதலாக, கிராமசபைக்குச் செல்வதற்கு) |

## 10. செயல்பாடுகள்

9–ம் வகுப்பிற்கான தேர்தல் கல்வியறிவுக் குழுவின் வழிகாட்டியான இந்நூல், விரிவான ஆறு செயல்முறைகளையும் அதனை நடத்த வேண்டிய முறைகளையும் கொண்டுள்ளது. இதில், சுவர் இதழ் செயல்பாடானது, குழுவினரால் மாதாந்திர அடிப்படையில் நடத்தப்பட வேண்டும். தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அனைத்து செயல்பாடுகளையும் நடத்த வேண்டிய கட்டாயமில்லை; அவற்றை கிடைக்கும் நேரத்தைப் பொறுத்து நடத்தலாம்.

## 11. அமர்வின் அமைப்பு

ஒவ்வொரு தேர்தல் கல்வியறிவுக் குழுவும் கொடுக்கப்பட்ட அமர்வின் அமைப்பைப் பின்பற்ற ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**கூடுமிடம்** – தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஓரிடத்தில் கூடும் பொழுது ஒருவரையொருவர் வணக்கம் கூறி வரவேற்க வேண்டும். பின்பு ஒருங்கிணைப்பாளர் முந்தைய அமர்வின் தொகுப்பை 5 முதல் 10 நிமிடத்திற்குள் தொகுத்துரைக்க வேண்டும்.

**நடத்த வேண்டிய செயல்பாடுகள்** – ஓர் அமர்வில் நடத்தப்பட வேண்டிய செயல்பாடுகள் அனைத்தையும் ஒருங்கிணைப்பாளர் ஏற்கனவே திட்டமிட்டபடி கொடுக்கப்பட்ட கால அவகாசத்திற்குள் முடித்துக் கொள்ள வேண்டும்.





ஊராட்சிக்கான செயலாளர் ஒருவரும் உள்ளார். அவரை அரசு நியமனம் செய்கிறது. ஊராட்சிக்கான செயலாளர் கிராம சபை மற்றும் ஊராட்சி மன்றத்தின் கூட்டங்களை நடத்துவதற்கு அழைப்பு விடுப்பது மற்றும் அவற்றின் செயல்பாடுகளைப் பதிவு செய்யும் பொறுப்புடையவர். பல்வேறு ஒழுங்குமுறை விதிகளும் நிபந்தனைகளும் மாநில சட்டமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது. இது மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடக் கூடும்.

### ஊராட்சியின் கால வரிசைப்படியிலான வளர்ச்சி:

1. 1948–49: இந்திய அரசியலில் ஊராட்சியின் பங்கு குறித்து அரசமைப்புக் குழு விவாதித்தது.
2. 1950: சனவரி 26 அன்று அரசமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது; அரசுக்கு வழிகாட்டும் நெறிமுறைகள், ஊராட்சிகளை தன் ஆட்சியின் ஒரு பகுதியாகக் குறிப்பிட்டது (40வது கூறு)
3. 1957: சனவரியில் ஏற்படுத்தப்பட்ட பல்வந்த்ராய் குழு நவம்பர் மாதம் 24 ஆம் நாளன்று தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. “மக்களாட்சியைப் பரவலாக்குவது” என்ற நடைமுறையை பரிந்துரைத்தது. பிற்காலத்தில் அதுவே “பஞ்சாயத்து ராஜ்” என்றழைக்கப்பட்டது.
4. 1958–60: மூன்றடுக்கு அமைப்பிலான ஊராட்சி அமைப்பைக் கொண்டுவரும் வகையிலான ஊராட்சிச் சட்டங்களை பல்வேறு மாநில அரசுகள் கொண்டு வந்தன.
5. 1978: இரண்டாம் தலைமுறைக்கான உள்ளாட்சி நிறுவனங்களின் தொடக்கத்தைக் குறிப்பிடக் கூடிய வகையில், கட்சி அடிப்படையிலான உள்ளாட்சித் தேர்தல்கள் மேற்கு வங்கத்தில் நடத்தப்பட்டன. உள்ளாட்சியின் செயல்பாடுகளை ஆராய்வதற்கு அசோகா மேத்தாக் குழு ஏற்படுத்தப்பட்டது.
6. 1991: நாடாளுமன்றத்தில் 72வது (உள்ளாட்சிகள்) மற்றும் 73வது (நகராட்சிகள்) திருத்தச் சட்ட முன்வரைவுகள் அறிமுகப்படுத்தப்பட்டன.
7. 1993: 1992 ஆம் ஆண்டு 73வது சட்டத் திருத்தம் ஏப்ரல் 24ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்தது. 1992 ஆம் ஆண்டு 74வது சட்டத்திருத்தம் ஜூன் 1 ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்தது.
8. 1993–94: 30–05–1993 மற்றும் 23–04–1994 க்கும் இடைப்பட்ட காலத்தில் அனைத்து மாநிலங்களும் “பஞ்சாயத்து ராஜ்” அமைப்பை உறுதிப்படுத்தும் சட்டங்களை இயற்றின.





# 13. அறிவுரைகளுடன் கூடிய செயல்பாடுகள்








## கிராம சபையைச் சென்று பார்வையிடுதல்

### அமைப்பு:

இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்திலும் மூன்றடுக்கு முறையிலான ஊராட்சி அமைப்பு முறைக்கு 1992 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் IX வது பகுதியில், மேற்கொள்ளப்பட்ட, 73வது அரசமைப்புச் சட்டத் திருத்தம் வகை செய்கிறது.

- கிராம அளவில் ஊராட்சி
- மாவட்ட அளவில் மாவட்ட ஊராட்சி
- துணை மாவட்ட அளவில் இடைநிலை ஊராட்சி (20 இலட்சத்திற்கும் குறைவாக மக்கள் தொகையுடைய மாநிலங்கள் /மத்திய ஆட்சிப் பகுதிகளில் இவை ஏற்படுத்தப்படவில்லை)

உள்ளூர் நிர்வாகத்தில் கிராம மக்கள் நேரடியாக பங்கேற்பதற்கான ஓர் அமைப்பாக ஒரு கிராம சபையை (ஊராட்சி தொகுதியின் எல்லைப் பகுதிக்குள் வசிக்கின்ற பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களால் ஆன பொது கூட்டமைப்புத் தொகுதி) ஏற்படுத்துவதற்கான சட்ட அமைப்பு மூலம் இது உருவாக்கப்பட்டுள்ளது.

ஊராட்சித் தேர்தல்களில் போட்டியிடுவதற்கு ஒரு நபர் குறைந்தபட்சம் 21 வயதை நிறைவு செய்திருக்க வேண்டும் மற்றும் ஊராட்சியின் நிர்ணயிக்கப்பட்ட கால அளவு 5 ஆண்டுகளாகும். பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடியினத்தைச் சார்ந்த வேட்பாளர்களுக்கான இடங்கள் மக்கள் தொகையில் அவர்களுடய விகிதாச்சாரத்திற்கேற்ப ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் குறைந்த அளவாக 33% இடங்கள் பெண்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊராட்சியின் அனைத்து உறுப்பினர்களுக்கான நேரடித் தேர்தலை நடத்துவது மாநில தேர்தல் ஆணையத்தின் பொறுப்பாகும்.

ஊராட்சி மன்றத் தலைவரே ஊராட்சியின் தலைவராவார். தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி மன்ற உறுப்பினர்களால் ஊராட்சி மன்றத்தின் முதல் கூட்டத்தில் அவர் தேர்ந்தெடுக்கப்படுவார். மாவட்டம் மற்றும் துணை மாவட்டங்களுக்கான தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களிடையே மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுவர்.

ஊராட்சி மன்றத்தின் பங்குகளும் பொறுப்புகளும் வெவ்வேறு மாநிலங்களிலும் வேறுபட்டிருக்கும். பொதுவாக, தங்களுடைய ஊராட்சித் தொகுதிகளுக்கான சமூக, பொருளாதார மேம்பாட்டிற்காக திட்டங்களைத் தயாரிப்பது மற்றும் அவற்றினை நடைமுறைப்படுத்துவது ஊராட்சி மன்றத்தின் பணிகளாக அமையும். இவற்றை செயல்படுத்துவதற்கு, மாநிலங்கள் ஊராட்சிகளுக்கு அதிகாரங்களை அளித்துள்ளது. உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிகளைப் பகிர்ந்தளிக்கத் தேவைப்படும் பொருளாதார நிறைவுக்கு வழிவகை செய்ய வேண்டும் (மாநில நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின்படி).

| தலைப்பு | |
|---|---|
| பிரிவு 1<br><br>தேர்தலுடன் தொடர்புடைய சொற்கள் அடங்கிய சொற்களஞ்சியம் மற்றும் சுவர் இதழின் கருப்பொருளுடன் தொடர்புடைய அடிப்படை கருத்துகளைக் கொண்டதாக இது இருக்கும். தேர்தல் கல்வியறிவுக் குழு சார்ந்த குறுஞ்செய்திகள், கருப்பொருளுடன் தொடர்புடைய செய்திகள் 2 அல்லது 3 வாக்கியங்களைக் கொண்டதாக இருக்க வேண்டும். | பிரிவு 2<br><br>தேர்தல் நடைமுறைகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தப்படும் கருப்பொருளின் மீது மாணவர்களை பங்கேற்கச் செய்ய வேண்டும். இது சார்ந்த கதைகள் மாணவர்களால் மேம்படுத்தப்பட்டு நடித்துக் காண்பித்துக் காட்சிப்படுத்தப்படும். மாறாக, "தேர்தலின் மீது நம்பிக்கை" என்ற பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்படும் தேர்தல் நிகழ்வுகள் தொடர்பான கருப்பொருளை வெளிக்காட்டக் கூடியதாகவும் இப்பிரிவு இருக்கும். |
| பிரிவு 3<br><br>இப்பிரிவு "நீங்கள் ஒரு வாக்காளரா? இல்லையென்றால் ஒரு வாக்காளர் என்ற நிலையை அடைய நீங்கள் என்ன செய்ய வேண்டும்?" என்பது போன்ற கருப்பொருளுடன் கூடிய வினாக்களுக்கான பதில்களை மாணவர்களிடம் எதிர்நோக்குவதாக அமைந்திருக்கும். அதற்கான பதிலை மாணவர்கள் எழுதுவதற்கு இதே பிரிவில் இடம் விடப்பட்டிருக்கும். இதனுடன், மாணவர்கள் தங்களது குறிப்புகளை எழுதுவதற்கும் அல்லது வினாக்களை எழுப்புவதற்கும் வெற்றிடம் விடப்பட்டிருக்கும். | பிரிவு 4<br><br>தேர்தல் கல்வியறிவுக் குழுவால் முன்னெடுத்துச் சொல்லப்படும் அறிவிப்புகள் மற்றும் முக்கிய செயல்கள் குறித்த விவரங்களைக் கொண்டதாக இப்பிரிவு இருக்கும். மாணவர்கள் தங்களது குறிப்புகளை எழுதுவதற்கும் அல்லது வினாக்களை எழுதுவதற்கும் வெற்றிடம் விடப்பட்டிருக்கும். மாவட்டத் தொடர்பு மையம்(தேர்தல்)த்தின் தொடர்பு எண் நன்கு தெரியக்கூடிய வகையில் இங்கு காட்சிப்படுத்தப்படும். |

### கால வரையறை (Timeline)

தேர்தல் கல்வியறிவுக் குழு உறுப்பினர்களால், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்திற்குள் சுவர் இதழ் உருவாக்கப்படும்.

### முதலாவது சுவர் இதழ்

முதலாவது சுவர் இதழ் பள்ளி மாணவர் மன்றத் தேர்தல்களைப் பற்றியதாக இருக்கும்.



## குடியரசுச் சுவர் : சுவர் இதழுக்கான மாதிரி விளக்கப்படம்

### மாதிரி . 1

**தலைப்பு: குடியரசு**

| | |
|---|---|
| ● மக்களின் அரசு, மக்களால், மக்களுக்காக என்பதே குடியரசாகும்.<br>● தேர்தலில் வாக்களிப்பதன் மூலம் மக்கள் தங்களின் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். |  |
| இந்திய நாட்டில் வாக்காளராவதற்கான தகுதிகள் யாவை? | தேர்தல் கல்வியறிவுக் குழுவின் அடுத்த கூட்டம் . . . . . . . . அன்று . . . . . . . . . . . மணியளவில் நடத்தப்படும்.<br><br>VVVkuHG IDEFFGHG ADFFG AACDDAAFF   VVVkuHG IDEFFGHG ADFFG AACDDAAFF   VVVkuHG IDEFFGHG ADFFG AACDDAAFF<br><br>வாக்குச்சாவடி நிலை அலுவலரின் தொடர்பு எண்.<br><br>ஒருங்கிணைப்பு அலுவலரின் தொடர்பு எண். |

குறிப்பு:– **தேர்தல் கல்வியறிவுக் குழுவின் 9–ம் வகுப்பு மாணவர்களால் சுவர் இதழின் அனைத்து பொருளடக்கமும் தயாரிக்கப்பட்டு நிர்வகிக்கப்படும். 10, 11, 12–ம் வகுப்பு மாணவர்கள், சுவர் இதழுக்கான உள்ளடக்கத் தயாரிப்புகளில் பங்கேற்பர்.**

செயல்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் மாணவர்களிடம் நினைவூட்ட வேண்டும். மாணவர்கள் அங்கு எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என அவர்களுக்கு விளக்கிக் கூற வேண்டும்; மாணவர்கள் தங்களுடைய அடையாள அட்டையை எடுத்துச் செல்வதுடன் ஓர் ஆசிரியரின் துணையோடும் செல்ல வேண்டும்.

2. அவ்வாறு உள்ளாட்சி மன்ற நிகழ்வுகளைப் பார்வையிடும் போது, மாணவர்கள் கிராம சபைக் கூட்ட நடைமுறைகளை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும். மாணவர்கள் கிராம சபை உறுப்பினர்கள் மற்றும் பஞ்சாயத்து உறுப்பினர்களுடன் கலந்துரையாட வேண்டும்.
3. மாணவர்கள் கீழ்க்கண்டவற்றை கவனிக்க வேண்டும்:
    a. கிராம சபையின் அளவு மற்றும் தொகுப்பு (பெண் மற்றும் ஆண் உறுப்பினர்களின் எண்ணிக்கை, மற்ற ஒதுக்கீடுகள், ஏதேனும் இருந்தால்)
    b. கிராம சபையின் பங்கு
    c. தேர்தல் அட்டவணை மற்றும் தற்போதுள்ள உள்ளாட்சியின் ஆயுட்காலம்
    d. உள்ளாட்சி உறுப்பினர்களின் பொறுப்புகள், பங்குகள் மற்றும் அவர்களின் கல்விப் பின்புலம்.
    e. அரசால் நியமிக்கப்பட்ட அலுவலர்களின் பொறுப்புகள் மற்றும் பங்களிப்பு.
    f. விவாதிக்கப்படுகின்ற பொருண்மைகள்
4. கிராம சபையின் வாக்காளர் பட்டியல் பதிவேட்டையும் மாணவர்கள் பார்வையிட வேண்டும்.
5. மாணவர்கள் அவர்களின் ஊராட்சி வருகையைக் குறித்து ஓர் அறிக்கை / விவரக்குறிப்பு எழுத வேண்டும்.

### கிராம சபைக்குச் சென்று வந்த பிறகு நிகழும் விவாதங்கள்

1. கிராம சபையைப் பார்த்து வந்த நிலையில், மாணவர்களுக்கு அது குறித்து நினைவூட்ட வேண்டும். ஒரு குறு நாடகமாக நடித்துக்காட்டும்படி சில மாணவத் தன்னார்வலர்களை ஒருங்கிணைப்பாளர் கேட்டுக் கொள்ள வேண்டும்.
2. 10 நிமிடங்கள் தங்களுக்குள் கலந்துரையாடிய பின்னர், கிராம சபையில் தாங்கள் கண்டவற்றை தன்னார்வலர்கள் நடித்துக் காட்ட வேண்டும்.
3. அதன் பின்னர், சித்திரக் கதையாக வரைந்து காட்டுவதன் மூலம் தங்களுடைய அனுபவத்தை பகிர்ந்து கொள்ளும்படி மாணவர்களிடம் ஒருங்கிணைப்பாளர் கேட்டுக் கொள்ள வேண்டும்.
4. கிராம சபையில் தாங்கள் கண்டறிந்தவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு பக்க சித்திரத்தை வரைவதற்கு வரைதாளும், தடித்த முனை கொண்ட அடையாளமிடும் வண்ண எழுதுகோலும் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். மாணவர்கள் கிராம சபைக்குச் சென்று பார்வையிட்டு வந்ததில் தாங்கள் பங்கேற்றதை வெளிப்படுத்தும் விதமாகவோ அல்லது தாங்கள் பார்வையிட்டதில் முக்கியமானவற்றை வெளிப்படுத்தும் விதமாகவோ அந்த ஓவியம் இருக்க வேண்டும். வரையோவியத்தின் வடிவமைப்பு தகவல் தொகுப்பில் வழங்கப்பட்டுள்ளது.





## செயல்பாடு: வாக்காளராகப் பதிவு செய்தல் மற்றும் தெளிவான வாக்காளர் குறித்த அட்டை விளையாட்டு

### கண்ணோட்டம்:

இந்த அட்டை விளையாட்டு விளையாடுபவர்களை தேர்தலில் வாக்காளராகப் பதிவு செய்வது மற்றும் தேர்தலில் வாக்களிப்பது ஆகிய நடைமுறைகளைக் குறித்து அறிந்து கொள்ளச் செய்கிறது. ஒரே நேரத்தில் 2 லிருந்து 6 நபர்கள் இதில் விளையாடலாம்.

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, மாணவர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

I) வாக்காளராவதற்கான தகுதிகளைக் குறித்து அறிந்து கொள்வது

II) வாக்காளராகப் பதிவு செய்வதற்கான செயல்முறை அறிவைப் பெறுதல்

III) வாக்குச் சாவடியினுள் நிகழும் செயல்பாடுகளைக் குறித்த அடிப்படை அறிவை மாணவர்கள் பெறுதல்.

### தகவல் தொகுப்புகள்:

i) அட்டை விளையாட்டு (வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து 4லிருந்து 5 தொகுதிகள்)

### கால அளவு: 30 நிமிடங்கள்

**கால வரையறை:** மே மாதம் முதல் வாரம்

### முறை:

1. யாதொரு வசதியும், வழிகாட்டலும் இல்லாமல், மாணவர்களைக் கொண்டு இந்த விளையாட்டு விளையாடலாம்.
2. விளையாட்டுடன் அறிவுறுத்தல்களும் காணப்படுவதால், மாணவர்கள், இந்த விளையாட்டை எப்பொழுதும் விளையாட முடியும்.
3. வகுப்பு மாணவர்களை 4லிருந்து 5 குழுக்களாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு குழுவிற்கும் ஓர் இணை (Set) அட்டையைப் பயன்படுத்தி விளையாடலாம்.
4. விளையாட்டுக்குப் பின்னர், வாக்காளராகப் பதிவு செய்தல் மற்றும் வாக்களித்தல் குறித்து சாதாரணமாக விவாதம் நடத்துவதற்கு ஒருங்கிணைப்பாளர் அழைப்பு விடுக்கலாம்.
5. பள்ளி மாணவர் மன்றத் தேர்தல்களில், மாணவர்கள் சேர்த்துக் கொள்ள விரும்பும் யாதொரு செயல்முறை மற்றும் தகுதிக்கான தேவைகளைக் குறித்தும் தேர்தல் கல்வியறிவுக் குழு உறுப்பினர்கள் விவாதிக்கலாம்.





6. 3–2–1 செயல்பாடுகளின் சுருக்கம் மற்றும் நினைவுகூரல்:

செயல்பாடுகளில் விளக்கப்பட்டுள்ளவாறு அனைத்து செயல்பாடுகளும் நினைவூட்டல் முறையில் பின்பற்றப் படவேண்டும். ஒருங்கிணைப்பாளர் வெவ்வேறு நபர்களிடம் கீழ்க்கண்டவற்றை வினவலாம்.

- இன்று நீங்கள் கற்றுக் கொண்ட **மூன்று** செயல்பாடுகள்
- மனதில் வைத்து கொள்ள வேண்டிய **இரண்டு** செயல்பாடுகள்
- எந்த **ஒரு** செயல்பாடு பற்றி அதிகம் தெரிந்து கொள்ள நினைக்கிறார்கள் (மாணவர்கள், செயல்பாடு குறித்த ஐயங்களைக் கேட்டுத் தெளிவு பெறலாம்.)





## செயல்பாடு : கிராம சபையைச் சென்று பார்வையிடல்

### கண்ணோட்டம்

மாணவர்களுக்கு ஊரகச் சூழலில், கிராம சபையின் அமர்வு ஒன்றைப் பார்வையிட்டு வருவதன் மூலம் மக்களாட்சியின் பிரதிநிதித்துவத் தன்மையைக் குறித்த நேரடி அனுபவங்களைப் பெறுவதே இச்செயல்பாட்டின் நோக்கமாகும். தேர்தல் மற்றும் வாக்களிப்பதன் முக்கியத்துவத்தை தேர்தல் கல்வியறிவுக் குழுவின் உறுப்பினர்கள் அறிந்து கொள்ள இவை உதவும் என நம்பப்படுகிறது.

### கற்றலின் விளைவு

செயல்பாடு முடிந்த பின்பு, மாணவர்கள் கீழ்க்கண்டவற்றை அறிந்திருக்க வேண்டும்.

i. தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்தல்: பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்கும் வழிமுறை.

ii. கிராமப் பஞ்சாயத்து / சபா/ உள்ளாட்சித் தேர்தல் நடைமுறைகளைப் புரிந்துகொள்ளுதல்

iii. செயல்பாடுகள் மூலம் பிரதிநிதித்துவ மக்களாட்சி குறித்து அறிந்து கொள்ளுதல்

### தகவல் தொகுப்பு:

i. உள்ளாட்சி குறித்த மாதிரிப் பார்வை (பக்கம் 27–29)

ii. சித்திர உருவாக்க அமைப்பு (பக்கம் 30–31)

### தேவையான பொருட்கள்

i. குறிப்பேடு மற்றும் எழுதுகோல்

ii. புகைப்பட ஆவணங்கள் தயாரிப்பதற்காக புகைப்படக் கருவி (விருப்பத்திற்கேற்ப)

iii. தடித்த (Chart)தாள் மற்றும் தடித்த வண்ண எழுதுகோல்

### பயிற்சிக்கான ஆயத்த நிலை:

i. பள்ளியானது, அருகிலுள்ள கிராம சபைக் கூட்டம் நடைபெறும் நாளில் பார்வையிட ஏற்பாடு செய்தல். மாற்றாக உள்ளாட்சி அமைப்பு ஒன்றினைப் பார்வையிட செல்லுதல்

ii. பாதுகாப்பை முன்னிட்டு ஆசிரியர்கள் மற்றும் போக்குவரத்து வசதி ஆகியவை பள்ளி நிர்வாகத்தால் முன்னரே ஏற்பாடு செய்தல்

**கால அளவு :** முழு நாள்

**கால வரையறை :** அருகிலுள்ள கிராம சபையின் கூட்ட அட்டவணைக்கிணங்க

### முறை:

1. கிராமசபையைப் பார்வையிடச் செல்வதற்கு முன், மாணவர்களிடம் அது குறித்து விளக்குவதற்கேற்ற வகையில், அவர்களின் சமூக அறிவியல் பாடப்புத்தகத்தில், உள்ளாட்சி அமைப்புகள் என்ற பாடப்பகுதியில் உள்ள உள்ளாட்சி குறித்த கருத்துகள் மற்றும் அவற்றின்





